**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| STC No. | : | 173/2021 |
| Name | : | Gunasekaran |
| P.W. | : | 5 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**07.08.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது கொமரலிங்கம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் விஸ்வநாதன் மற்றும் உதவி ஆய்வாளர் ரோஸ்லின் அந்தோணியம்மாள் ஆகியோர்களின் கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சயம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் நான் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த **09.01.2020** ம் தேதி தலைமை காவலர் விஸ்வநாதன் நிலைய அலுவலில் இருந்த போது உடுமலை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இண்டிமேசன் பேரில் அங்கு சென்று பார்த்த போது காயம்பட்ட லட்சுமணன் மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு சென்றது தெரிந்து கோவை அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த கிருஷ்ணசாமி மகன் லட்சுமணன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து கொமரலிங்கம் காவல் நிலைய குற்ற எண். **09/2020** இதச பிரிவுகள் **279, 337** ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **புகார்**

**வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கை முறையே அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து நீதிமன்றத்திற்கும், அதன் ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் சண்முகம் அவர்கள் வசம் ஒப்படைத்துள்ளார். இவ்வழக்குக் கோப்பை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் ரோஸ்லின் அந்தோணியம்மாள் 09.01.2020 ம் தேதி 16.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராமசுப்பு மற்றும் ஜீவா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரியானவர் 28.01.2020 16.30 மணிக்கு நிலையம் ஆஜரானவரை விசாரித்து தகுந்த பிணையத்தின் பேரில் விடுவித்துள்ளார். இவ்வழக்கு சம்மந்தப்பட்ட TN 78 W 6028 Splendor மற்றும் TN 78 R 3081 Splendor இருசக்கர வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்து மோட்டார் வாகன ஆய்வாளர் செல்வதீபா அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கைகள் பெற்றுள்ளார். **TN 78 W 6028 Splendor வாகனத்தின் மோட்டர் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும் TN 78 R 3081 Splendor இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கில் காயம்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்த உடுமலை அரசு மருத்துவனை மருத்துவர் மனோஜ் அவர்களை விசாரித்து விபத்து பதிவேடு மற்றும் காயச் சான்றுகள் பெற்றுள்ளார். **லட்சுமணன் என்பவரின் காயச் சான்று அ.சா.ஆ.8 ஆகவும், ஸ்ரீதேவி என்பவரின் காயச் சான்று அ.சா.ஆ.9 ஆகவும், ஆஷாராணி என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்று அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு காயம்பட்டவர்கள் லட்சுமணன் மற்றும் ஸ்ரீதேவி ஆகியோருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அவர்களுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என காயச் சான்று வழங்கியதால் வழக்கின் சட்டப்பிரிவை 279, 337 இதசவில் இருந்து 279, 337, 338 இதசவாக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது 279, 337, 338 (2 counts) இதச– ன் படி 23.03.2020 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) இந்த சம்பவத்தில் எதிரிக்கும் பலத்த காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். எதிரியும், புகார்தாரரும் உறவினர்கள் என்றால் சரிதான். விசாரணை அதிகாரி சொன்னபடி சொன்ன தேதியில் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரின் பேரில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.08.07 18:50:55 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்